10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 200 ஞாயிற்றுக்கிழமை டிசெம்பர் 10 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## 1,76,248 டெங்கு நோயாளர்கள்

கொழும்பு, டிசெ. 10

நாட்டில், கடந்த ஒரு வருடத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 76 ஆயிரத்து 248 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில், மேல் மாகாணத்தில்

06 ▶

## பசிலுக்கு எதிராக 8 கட்சிகள் முறைப்பாடு

கொழும்பு, டிசெ.10

உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஆசனப்பங்கீட்டில் பசில் ராஜபக்ச நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதாக கூட்டு எதிரணியில் இடம்பெற்றுள்ள எட்டு அரசியல் கட்சிகள், மகிந்த ராஜபக்சவிடம் முறையிட்டுள்ளன.

மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி, பவித்

06 ▶

## வட மாகாண சபை உறுப்பினர் விலகல்

யாழ்ப்பாணம், டிசெ. 10

வட மாகாண சபை உறுப்பினர் மொகமட் ரியாஸ் தனது பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இவ்வறிவித்தலை தேர்தல்கள் ஆணைக்குழு, மற்றும் வட மாகாண சபையின் பேரவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினரான மொகமட் ரியாஸ் தனது கட்சியைச் சேர்ந்த மற்றுமோர் உறுப்பினருக்கு சந்தர்ப்பம் அளிக்கவே

06 ▶





# முடிந்தது நாடகம்

## பங்காளிகள் கூட்டாக அறிக்கை வீட்டுக்கு வாக்களிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெம்பர் 10

பங்காளிக் கட்சிகள் இடையிலான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சுமூகத் தீர்வு எட்டப்பட்டுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதன் பின்னர், அக்கட்சிகளின் தலைவர்களான இலங்கைத் தமிழரசுக் கட்சியின்மாவை. சேனாதிராஜா, ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன், புளொட்டின் த.சித்தார்த்தன் ஆகியோர் கூட்டு அறிக்கை

06 ▶

## 15,000 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

கொழும்பு, டிசெ. 10

வேலையற்ற பட்டதாரிகள் 15 ஆயிரம் பேருக்கு விரைவில் வேலை வாய்ப்பு வழங்கப்படும் எனக் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல அம்பகமவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேசிய பாடசாலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்களை வழங்கும் நிகழ்வி

06 ▶

## நிறைவேறியது சட்ட மூலம்

கொழும்பு, டிசெ. 10

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நேற்று மாலை நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 137 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் கிடைத்தன. 8 வாக்குகள் பதிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## 99 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது "பட்ஜெட்"

கொழும்பு, டிசெ. 10

2018 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வரவு - செலவுத் திட்டம் கடந்த மாதம் 9 ஆம் திகதி நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது. கடந்த ஒரு மாத காலமாக அதன் மீதான விவாதங்கள் நடத்தப்பட்டன.

இந்நிலையில், இதன் மீதான மூன்றாவது வாசிப்பு தொடர்பான விவாதங்கள் முடிவடைந்த நிலையில் நேற்று மாலை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதில் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக

06 ▶



## ஊடகவியலாளர்களுக்கு இராணுவம் அச்சுறுத்தல்

முல்லைத்தீவு, டிசெ. 10

சிங்கள மயமாக்கப்படும் தண்ணிமுறிப்பு கிராமம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை இராணுவம், பொலிஸ் பிடித்து தடுத்து வைத்ததுடன், அவர்கள் சேகரித்த படங்கள், வீடியோக்களையும் அழித்த பின் கடுமையாக மிரட்டி விடுவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சியைச் சேர்ந்த த.வினோஜித், வி.கஜீபன், சி.நிதர்சன், க.ஹம்சனன், த.பிரதீபன், க.சபேஸ், கு.செல்வகுமார், சு.பாஸ்கரன் ஆகியோரே இவ்வாறு இராணுவம், பொலிஸா

06 ▶

## கடலில் குளித்த முதியவர் மரணம்

வடமராட்சி, டிசெ. 10

கடலில் குளித்த முதியவர் தடுமாறி வீழ்ந்து மூழ்கி உயிரிழந்தார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் பருத்தித்துறை - இன் பருட்டியில் நிகழ்ந்த

06 ▶

## கூட்டமைப்பின் பங்காளிகளின் ஆசனப் பங்கீடு வெளியானது

கொழும்பு, டிசெ. 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இடையிலான ஆசனப் பங்கீட்டின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் இதில் முழுமையான உடன்பாடு எட்டப்படவில்லை எனத் தெரிகிறது.

நேற்று கொழும்பில் சுமார் 4 மணி நேரப் பேச்சின்போது இந்த முடிவுகள் எட்டப்பட்டன. இதில் ரெலோ திருப்தி அடைந்த போதும் புளொட் சற்று

06 ▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 45 ஆயிரம் பாலியல் தொழிலாளிகள்



கொழும்பு,டிசெ.10

நாடு முழுவதும் 45 ஆயிரம் பெண்கள், பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவதாகக் குருணாகல் வைத்தியசாலையின் எயிட்ஸ் மற்றும் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவின் சிறப்பு மருத்துவ நிபுணர் எச்.ஏ.சி. டப்ளியூ.ஹத்துருசிங்க நேற்று சனிக்கிழமை தெரிவித்தார்.

அத்துடன், குறித்த பெண்கள் தினமும் மூன்று இலட்சம் ஆண்களின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். சர்வதேச எய்ட்ஸ் நோய் தினத்தை முன்னிட்டுக் குருணாகல் பௌத்த இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் தற்போது சுமார் 25 இலட்சம் ஓரினச் சேர்க்கையாளர்கள் இருப்பதாகவும், மேலும் இதுவரை 2 ஆயிரத்து 600 எய்ட்ஸ் நோயாளிகள் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தற்போது பாலியல் சார்ந்த நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்களில் பெரும்பாலானோர் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களே எனவும் ஹத்துருசிங்க தெரிவித்தார். (அ)



# மைத்திரி–மகிந்தவின் 'கலியாணக் கதை'

கொழும்பு, டிசெ. 10

உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு எதிரணி இணைந்து போட்டியிடுவதற்கு வாய்ப்பு இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தனவின் மகனின் திருமண நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசியிருந்த போதிலும், அரசியல் இணைவு பற்றி அவருடன் எந்தப் பேச்சும் நடத்தவில்லை என்றும் மகிந்த கூறியுள்ளார்.

"நாங்கள் அரசியல் பேசவில்லை. தாம் மற்றொரு திருமணத்தில் அன்றைய தினம் பங்கேற்க வேண்டியிருப்பதாக மைத்திரிபால சிறிசேன என்னிடம் கூறினார்.

நானும் கூட இன்னொரு திருமணத்துக்குப் போக வேண்டியிருப்பதாக அவரிடம் கூறினேன். இதைத் தவிர வேறெதுவும் நாம் பேசவில்லை. நாம் பேசியதெல்லாம் அடுத்த திருமணம் பற்றிய கதை தான்" என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

# காணாமல் போனோர் பணியகம் 7 ஆணையாளர்கள் நியமனம்

கொழும்பு, 10

காணாமல் போனோர் பணியகத்தின் ஆணையாளர்களாக நியமிப்பதற்கு ஏழு பேரின் பெயர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, அரசியலமைப்பு சபை முன்மொழிந்துள்ளது.

காணாமல் போனோர் பணியகத்தின் ஏழு ஆணையாளர்களைத் தெரிவு செய்வதற்காக, அரசியலமைப்பு சபை விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இதற்கமைய, 100 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன.

இந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்டோரைக் கொண்ட அரசியலமைப்பு சபை, ஆணையாளர்களாக நியமிக்கத் தகுதிவாய்ந்த 7 பேரின் பெயர்களை தெரிவுசெய்து, ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவர்களின் நியமனங்களை அங்கீகரித்த பின்னர், காணாமல் போனோர் பணியகத்தின் ஆணையாளர்களாக நியமிக்கப்படுவார்கள்.

இதனிடையே, காணாமல் போனோர் பணியகத்தின் ஆணையாளர் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஏழு பேரில் மனித உரிமை செயற்பட்டாளர் நிமல்கா பெர்னாண்டோரும் ஒருவர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இவரை இந்தப் பதவிக்குத் தெரிவு செய்வதற்கு, அரசியலமைப்பு சபையில் இடம்பெற்றுள்ள ஜேவிபி உறுப்பினர், விஜித ஹேரத் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். (அ)

# இனிமேல் ரயிலும் அத்தியாவசிய சேவை




கொழும்பு,டிசெ.10

நாட்டில் நிலவி வரும் தற்போதைய நிலையினைக் கருத்திற் கொண்டு ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போக்குவரத்துப் பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க நேற்றுச் சனிக்கிழமை தெரிவித்தார்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்காக இந்த விடயம் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி இதில் கைச்சாத்திட்ட பின்னரே அரச அச்சகப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும், அதனைத் தொடர்ந்து அதன் சட்டவிதிகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# பாலியல் விடுதி சுற்றி வளைப்பு

கொழும்பு,டிசெ.10

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை இலக்கு வைத்து ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற பேரில் நடத்தி, செல்லப்பட்ட பாலியல் விடுதியொன்று பொலிஸாரால் நேற்று சனிக்கிழமை சுற்றி வளைக்கப்பட்டது.

இந்தப் பாலியல் விடுதியை நடத்திச் சென்ற அதன் முகாமையாளர் மற்றும் 7 பெண்கள் கல்கிஸைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இங்கு பாலியல் தொழிலில் ஈடுபட்ட இளம் பெண்கள் 28 - 38 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், கம்பஹா, சீதுவ, பலங்கொட, பதுளை மற்றும் அனுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண்கள் உயர் தொழில்களில் ஈடுபடுதாக வீடுகளில் கூறிவிட்டு இவ்வாறு பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றனர். கல்கிஸைப் பகுதியின் இரண்டு மாடி வீட்டில் மசாஜ் நிலையம் என்ற பெயரில் நடத்தி செல்லப்படுகின்ற இந்தப் பாலியல் விடுதியில் 1500 ரூபா முதல் 10,000 ரூபா வரையில் இளம் பெண்கள் விற்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. (அ)

# இலங்கைக்கு 14 மில்லியன் டொலர் கொரியா கொடுக்கும்

கொழும்பு,டிசெ.10

குப்பை அகற்றும் தொழில் முறைக்குதவும் வகையில் கொரியாவின் ஏற்றுமதி- இறக்குமதி வங்கி 14 மில்லியன் டொலர் பெறுமதியான கடன் உதவிகளை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக இலங்கைக்கான கொரியத் தூதரகம் நேற்று சனிக்கிழமை தெரிவித்தது.

குறித்த திட்டத்தின் கீழ் அனைத்து மாகாணங்களுக்கும் 190 குப்பை சேகரிக்கும் வாகனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திண்மக் கழிவுகளைத் திறமையான முறையில் அகற்றுவதே இதன் பிரதான நோக்கமெனவும், வழங்கப்படவுள்ள வாகனங்கள் அனைத்தும் குறைந்த நேரத்தில், குறைந்த செலவில் பெருமளவு குப்பைகளைத் திறமையான முறையில் அகற்றும் வல்லமை கொண்டன என்றும் உறுதியளிக்கப்பட்டது. மேலும், வட்டியில்லாக் கடன் முறையில் வழங்கப்படவுள்ள இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த மொத்தமாக நாற்பது ஆண்டு கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. (அ)



# சிங்கப் படைக்கு புதிய தளபதி

கொழும்பு,டிசெ.10

இலங்கை இராணுவத்தின் சிங்கப் படையணி கேர்ணல் கொமாண்டன்டாக மேஜர் ஜெனரல் பியல் விக்ரமரத்தின கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் இலங்கை இராணுவத்தின் சிங்கப் படையணித் தலைமையகத்தில் வைத்து 10ஆவது தளபதியாகக் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இதன்போது, மேஜர் ஜெனரல் பியல் விக்ரமரத்தின மத வழிபாடுகளை மேற்கொண்டு ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டதுடன், இதன்போது படைத் தலைமையக வளாகத்தில் நாக மரமும் நடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, புதிய கேர்ணல் கொமாண்டன்ட் தனது அதிகாரபூர்வ கையொப்பத்தை இட்டு இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினரின் முன்னிலையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். (அ)

# புறக்கணிப்பு தொடர்ந்தால் பணி நீக்கம் நிச்சயம்



கொழும்பு,டிசெ.10

ரயில் சேவையாளர்களின் பணிப் புறக்கணிப்புத் தொடர்ந்தால், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பணியிலிருந்து தாமாக விலகியவர்களாகக் கருதப்படுவர் எனப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று சனிக்கிழமை அறிவித்தார்.

"ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக மாற்றி வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், போராட்டம் தொடர்ந்தும் இடம்பெறும் பட்சத்தில் குறித்த நடவடிக்கை எடுக்கப்படும்" எனவும் அவர் தெரிவித்தார்.

ஆட்சேர்ப்பு முறைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரயில் சேவையாளர்கள் கடந்த 6ஆம் திகதி நள்ளிரவு முதல் பணிப்புறக் கணிப்பை ஆரம்பித்ததால், சகல பகுதிகளுக்குமான ரயில் சேவைகள் பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி Ethiroli

ஞாயிறு, 10 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

# பங்காளிச் சண்டை முடிந்தாலும்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டுப் பிரிந்து போவதாகச் சொன்ன ரெலோ மீண்டும் இணைந்து விட்டது. தமிழரசுக் கட்சியுடன் தொகுதிப் பங்கீட்டில் முரண்பாடு ஏற்பட்டால், தேர்தலில் இருந்து ஒதுங்குவோமே தவிர கூட்டமைப்பை விட்டுப் போகமாட்டோம் என்று சொன்ன புளொட்டும், இணக்கப்பாட்டுக்கு வந்து, வீட்டுச் சின்னத்தில் களம் காணவுள்ளது.

ஆனால் தமக்கிடையான முரண்பாடுகள் முற்றியவுடன், இந்த மூன்று தரப்பும் மாறி மாறி அடுத்த தரப்பை பற்றிச் சொன்ன அவதூறுகள் இன்னும் மக்கள் மனதில் இருக்கத்தான் செய்கின்றன. தமிழரசுக் கட்சி, அராஜகத்தோடு நடந்து கொள்வதாகவும், பங்காளிக் கட்சிகளுக்கு எந்தவித விட்டுக் கொடுப்புகளையும் செய்ய அது தயாராக இல்லை என்றும், தான் கொடுப்பதையே பங்காளிக் கட்சிகள் ஏற்றுக்கொள்வது போல திமிரோடு நடப்பதாகவும் புளொட்டும், ரெலோவும் குற்றம் சாட்டியிருந்தன.

" தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி மட்டும் தான் ஜனநாயகமான கட்சி, மற்றையவையெல்லாம் ஆயுதக் குழுக்களே, அவை போவதையிட்டுப் பிரச்சினை இல்லை, இந்த ஆயுதக் குழுக்கள் போனால் தான் கூட்டமைப்பு புனிதமாகும்" என்று தன் பங்குக்கு தமிழரசுக் கட்சியும் வசைபாடியிருந்தது. இந்த வசைபாடல்கள் குறித்த கட்சிகளின் மேல்மட்டத்தினர் மட்டுமல்லாது, அடிமட்டத் தொண்டர்களிடத் தேயும் பரவியது. குறிப்பாக சமூக வலைத்தளங்களில் இந்த மோதல் உக்கிரமாக இருந்தது. இப்போது எல்லோரும் ஒன்றானவுடன், கட்சியின் தலைமைகளுக்காக வக்காலத்து வாங்கிய சமூகவலைத்தளப் போராளிகள் என்ன பதிவு போடுவதென்று தெரியாமல் தலையைத் தொங்கப் போட்டுள்ளார்கள்.

பங்காளிச் சண்டை முடிந்ததாக, மூன்று கட்சிகளினதும் சார்பில் மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பிய கடிதத்தோடு எல்லாமே சுபம் என்று அர்த்தமாகிவிடாது. பங்காளிச் சண்டை முடிந்தாலும் அங்காளிச் சண்டை இனித்தான் ஆரம்பமாகும். தமிழரசுக் கட்சியோடு முரண்பட்டபோதே, கூட்டமைப்பில் இருந்து விலகி, உதயசூரியனோடோ அல்லது சைக்கிளோடோ இணைந்து இன்னொரு பலமான கூட்டணியை உருவாக்க வேண்டும் என்பதே புளொட், ரெலோ கட்சிகளின் இரண்டாம் கட்டத் தலைமைகளினதும், பிரதேச மட்ட ஆதரவாளர்களினதும் அபிப்பிரயமாக இருந்தது. ஆனால் அதனைப் புறம் தள்ளி, தமது பேரம் பேசுதல் வென்றதாலும், கூட்டமைப்பில் இருந்து பிரிந்தால் இதுவரை அனுபவித்த சில சலுகைகளை இழக்க நேரிடும் என்பதாலும் மீண்டும் வீட்டுக்குள்ளேயே ரெலோவும், புளொட்டும் சரணடைந்துவிட்டனர். இதன் பிரதிபலிப்பாக குறித்த இரு கட்சிகளினதும் ஆதரவாளர்களும், இரண்டாம் கட்டத் தலைமைகளும் உயர் மட்டத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ளனர். அதன் விளைவாக தமது கட்சியில் இருந்து வேறு கட்சிகளுக்கு தாவத் தொடங்கி விட்டனர். நெடுங்கேணியில் கூட்டமைப்பைச் சேர்ந்த 14 பேர் உதயசூரியன் பக்கம் 'பல்டி' அடித்து விட்டார்கள். கிளிநொச்சியிலும் ரெலோ சார்பில் போட்டியிட இருந்த சில வேட்பாளர்களும் வேறு கட்சியில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்கள். இவையெல்லாம் குறித்த இரு கட்சிகளையும் இன்னும் பலமிழக்கச் செய்வதாக அமைவதோடு, தேர்தலிலும் கணிசமான வாக்குச் சரிவை உண்டுபண்ணும்.

அத்தோடு, இனி தமக்கென ஒதுக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர் யாரென்று முடிவு செய்யும் போதும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் போதும் இன்னொரு பிரளயம் ஒவ்வொரு கட்சியிலும் வெடிக்கும். ஏனெனில் கடந்த முறை அதிக வாக்குகளைப் பெற்றவரே தவிசாளர் என்ற வாய்ப்பாட்டின் கீழ், உள்ளூராட்சி மன்றத் தலைமைக்கான போட்டி இல்லாது செய்யப்பட்டது. ஆனால் இம்முறை வட்டார முறையிலான தேர்தல் என்பதால், அதிக வாக்குப் பெற்றவரே தவிசாளர் என்ற கதையெல்லாம் எடுபடாது. ஏனெனில் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரேயளவான வாக்காளர் எண்ணிக்கை கிடையாது. அது கூடிக் குறையலாம். எனவே தவிசாளர் யார் என்று தீர்மானிக்கும் போது, அதற்கு எதிராக மற்றவர்கள் போர்க்கொடி தூக்கலாம். அதேபோன்றே யார், யார் வேட்பாளர்கள் என்று முடிவு செய்யும் போதும், ஒரே வட்டாரத்தில் இருவர் அல்லது அதற்கும் மேற்பட்டவர்கள் ஒரேகட்சியில் செல்வாக்குள்ளவர்களாக இருந்தால் அவர்களில் யாருக்கு போட்டியிடும் வாய்ப்பை வழங்குவது என்ற தலையிடியும் காத்திருக்கிறது.

ஆகவே பங்காளிச் சண்டை முடிந்தாலும், உள்கட்சிச் சண்டைகள் இனித்தான் ஆரம்பமாகப் போகின்றன.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

## அம்பாந்தோட்டை துறைமுகம்

# சீனாவிடம் கையளிக்கப்பட்டது




கொழும்பு, டிசெ. 10

அம்பாந்தோட்டை துறைமுகம் நேற்று முறைப்படி சீன நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டது. அம்பாந்தோட்டை முறைமுகத்தை செயற்படுத்துவதற்காக, அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுமம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுக சேவைகள் நிறுவனங்களுடன் அரசாங்கம் உடன்படிக்கை செய்திருந்தது.

இந்த நிறுவனங்களை உருவாக்கிய சீனாவின் மேர்ச்சன்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம், அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 85 வீத உரிமையையும், இலங்கை துறைமுக அதிகார சபை 15 வீத உரிமையையும் கொண்டிருக்கும். 99 வருட குத்தகைக்கு வழங்கப்படுவதன் மூலம் 112 கோடி டொலர்கள் வருமானமாக இலங்கைக்கு கிடைக்கும்.

நேற்று அம்பாந்தோட்டை துறைமுகத்தை பொறுப்பேற்ற சீன நிறுவனம், அரசாங்கத்துக்கு வழங்க வேண்டிய முதற்கட்டக் கொடுப்பனவான, 29 கோடியே 30 இலட்சம் டொலர் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் பணியாற்றுவோரின் உறவினர்கள் துறைமுக வளாகத்திற்கு எதிரே நின்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். துறைமுகத்தில் பணியாற்றும் தமது உறவினர்களின் தொழிலுக்கு உத்தரவாதம் வழங்கக் கோரியே இப் போராட்டம் நடத்தப்பட்டது. (ச)

# ஊழலை ஒழிக்க இலங்கை தயார்

கொழும்பு,டிசெ.10

ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் நேற்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

'அபிவிருத்தி, சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பனவற்றுக்காக ஊழல்களைக் கண்டறிய ஒன்றிணைவோம்' என்பதே இந்த ஆண்டின் ஊழல் எதிர்ப்பு தினத்தின் தொனிப்பொருளாகும். ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டொலர் அளவில் கையூட்டல் வழங்கப்படுவதாகவும், மோசடியான முறையில் சிலர் கொள்ளையிடும் பணத்தின் மதிப்பு 2.6 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஊழல் ஒழிப்புச் செயற்றிட்டத்துக்கு ஆதரவளிக்கத் தயார் என இலங்கை அறிவித்துள்ளது. (அ)

## பொலித்தீன் இறக்குமதி

# மீண்டும் பரிசீலனை

கொழும்பு, டிசெ. 10

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் தொடர்பில் ஜனவரி மாதம் தொடக்கம் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படும் என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்தது.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் இறக்குமதிகளை பரிசீலிக்கும் நடவடிக்கைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்து என அச்சபை மேலும் தெரிவித்தது. (ச)

## கல்வி தொடர்பில்

# சர்வஜன வாக்கெடுப்பு

கொழும்பு,டிசெ.10

நாட்டின் கல்வியை வியாபாரமயமாக்கின்றமை தொடர்பில் மக்களின் விருப்புக்களைத் தெரிந்து கொள்ள, சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டுமென, அரச மருத்துவப் பீட மாணவர்களின் பெற்றோர் சங்கம் அரசாங்கத்திடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக, சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிமல் கருணாசிறி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

குறித்த வாக்கெடுப்பில் 70 சதவீத மக்கள், எதற்கு விருப்பம் தெரிவிக்கின்றனரோ, அதனைச் செயற்படுத்துவதோடு அதற்குத் தாம் எந்தவித எதிர்ப்பினையும் வெளிப்படுத்தப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# நடைபவனியும் கருத்தமர்வும்

யாழ்ப்பாணம், டிசெ. 10

கொழும்பு மத்திய நகர, யாழ்ப்பாணம் "இன்னர் வீல்" கழகங்கள் இணைந்து "போதையற்ற உலகம் செய்ய ஒன்றிணைவோம்" என்ற தொனிப்பொருளில் நடைபவனி, கருத்தமர்வை நடத்தவுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். முற்றவெளி மைதானத்தில் ஆரம்பிக்கும் நடைபவனி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் முடிவடையும். அதைத் தொடர்ந்து அங்கு கருத்தமர்வு இடம்பெறும். (ச)

# ஊடகவியலாளர் தாக்கப்பட்டார்

மாங்குளம், டிசெ. 10

வீதியில் சென்றுகொண்டிருந்த ஊடகவியலாளர் வாள், பொல்லுகளுடன் வந்த மூவர் குழு வழிமறித்துத் தாக்கியது.

மாங்குளம் சந்தியில் நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் கிளிநொச்சி பரந்தனைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாஸ்கரன் என்பவரே தாக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பாண்டியன்குளத்தில் உள்ள தாயாரின் வீட்டுக்கு சென்று விட்டுத் திரும்பிய ஊடகவியலாளரை, மூவர் மோட்டார் சைக்கிளில் துரத்தியுள்ளனர். இதையடுத்து அவர் மாங்குளம் சந்தியில் உள்ள முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தில் தஞ்சம் புகுந்தார்.

துரத்தியவர்கள் அவரையும், மறிக்க முயன்ற ஒருவரையும் தாக்கினர். அப்பகுதியில் மக்கள் கூடவே, தாக்குவதை விட்டுவிட்டு தப்பியோட குழு முனைந்தது. எனினும் மக்கள் ஒருவரைப் பிடிக்கவே இருவர் தப்பிச் சென்றனர்.

பிடிபட்டவரையும் அவரின் மோட்டார் சைக்கிளையும் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் மக்கள் ஒப்படைத்தனர். சம்பவம் குறித்தும் ஊடகவியலாளர் முறைப்பாடு செய்துள்ளார். (ச)

# யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் சு.க. கை சின்னத்தில் போட்டி

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கை சின்னத்தில் போட்டியிடும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒவ்வொரு கட்சிகளுடனும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. ஆனால் யாழ்ப்பாணம் கிளிநொச்சியில் கை சின்னத்தில் போட்டியிடவுள்ளது என அவர் கூறினார்.

சாவகச்சேரியில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று முன்தினம் யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியிடம் செலுத்திய பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார். (ச)

## இன்று நாளும் கோளும்

10.12.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 24 ஆம் நாள்

ஸப்தமி பகல் 07.56 மணி வரை | பூரம் பகல் 11.25 மணி வரை | அமிர்தயோகம்

இராகுகாலம் 4.30 - 06.00 | சுபநேரம் 03.15 - 04.15 | எமகண்டம் 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சாந்தம் | போட்டி | ஆர்வம் | கவலை | தடங்கல் | சலனம் | பயம் | ஆக்கம் | பரிசு | பயம் | தெளிவு | உதவி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம், விஞ்ஞானம் கற்பிக்க இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள்



கொழும்பு,டிசெ.10

மலையகத் தோட்டப் பாடசாலைகளில் காணப்படும் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையைப் போக்கும் வகையில் இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை வரவழைக்க அரசாங்கம் நடவடிக்கையெடுத்து வருவதாகக் கல்வியமைச்சு நேற்று சனிக்கிழமை தெரிவித்தது.

தோட்டப் பாடசாலைகளில் மாத்திரமல்லாது ஏனைய தமிழ்ப் பாடசாலைகளிலும் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கத் தகுதியான ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால், மாணவ, மாணவிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும், இது குறித்துப் பிரதமருடன் கலந்துரையாடியதாகவும் இதன் போது தகுதியான 100 ஆசிரியர்களை இந்தியாவிலிருந்து வரவழைக்கப் பிரதமர் இணங்கியதாகவும் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (அ)



# பட்டதாரிகள் போராட்டம்

கொழும்பு,டிசெ.10

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்குவதில் அரசாங்கத்தின் நிலைப்பாடு மற்றும் வேலையற்ற பட்டதாரிகளின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக விசேட கலந்துரையாடல் கூட்டமும், மனிதச் சங்கிலிப் போராட்டமும் காரைதீவு சுற்று வட்டத்துக்கு அருகாமையில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இதன் போது அகில இலங்கைப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் தன்னே ஆனந்த தேரர் மற்றும் அம்பாறை முஸ்லிம் வேலையற்ற பட்டதாரிகளின் தலைவர் ஏ.ஜசீர் ஆகியோர் அடங்கலாகப் பலர் கலந்து கொண்டனர். இதன் போது கருத்துத் தெரிவித்த அகில இலங்கைப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் தன்னே ஆனந்த தேரர் "எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் பட்டதாரிகள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்காவிட்டால் நாம் தேர்தலை முற்றிலும் புறக்கணிக்கப் போகின்றோம். இதனை உடனடியாக மத்திய அரசும் மாகாண அரசும் கவனத்தில் கொண்டு விரைவில் தீர்மா னத்தை பெற்றுத்தர வேண்டும்" எனக் கோரியுள்ளார். (அ)

# கூட்டுறவை மேம்படுத்த நெல்லியடியில் கூட்டம்



வடமராட்சி, டிசெ.10

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ சங்கத்தின், அபிவிருத்திக் கூட்டம் சங்கத் தலைவர் ம.ஜெயநாதன் தலைமையில் சங்கக் காரியாலயத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது.

இதில் கூட்டுறவு நிறுவனங்கள் தற்பொழுது எதிர்நோக்கும் பிரச்சினைகள்,அதன் சாதக பாதக சூழ்நிலைகள், எதிர்காலத்தில் ப.நோ.கூ . சங்கங்களூடான வேலைவாய்ப்புக்கள், அபிவிருத்தித் திட்டங்கள், ஊழியர் சம்பளம் மற்றும் பொது மக்களுக்குக் குறைந்த விலையில் பொருட்களை வழங்குதல் ஆகியன குறித்துக் கலந்துரையாடப்பட்டது. (அ-11)

# புலனாய்வாளர்களால் பேரணியில் பதற்றம்

வவுனியா,டிசெ.10

வவுனியாவில் 16 வயதுச் சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட பேரணியைப் பல புலனாய்வாளர்கள் தமது தொலைபேசிகளிலும், கமெராக்களினாலும் புகைப்படம் எடுத்தனர்.

பேரணி நடத்தியவர்களையும், அந்தப் பகுதியிலிருந்த ஊடகவியலாளர்களையும் இவ்வாறு புலனாய்வாளர்கள் புகைப்படம் எடுத்துள்ளமை பேரணியில் ஈடுபட்டவர்களிடையே அச்ச நிலையைத் தோற்றுவித்தது.மேலும் பேரணியில் ஈடுபடும் போது தமக்குப் புலனாய்வாளர்களால் ஏதும் பிரச்சினைகள் ஏற்படுமோ என்ற அச்சத்திலேயே கலந்து கொண்டதாகப் பேரணியிலீடுபட்டவர்கள் குறிப்பிட்டனர்.

அத்துடன் நல்லாட்சி அரசிலும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் தொடர்வதாகப் போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தினர்.

"தற்போது புலனாய்வாளர்கள் அச்சுறுத்தும் வகையில் புகைப்படம் எடுக்கின்றனர், ஆட்சி மாறி நல்லாட்சி எனக் கூறுகின்ற போதிலும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் குறையாமல் தொடர்ந்த வண்ணமேயுள்ளத" எனப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் விசனம் வெளியிட்டனர்.(அ)




# வாயுவுக்குத் தடை

கொழும்பு,டிசெ.10

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஹைட்ரோகுளோரோஃப்ளோரினோ கார்பன் வாயு மூலம் தயாரிக்கப்படும் உற்பத்திகளை உள்நாட்டுக்குக் கொண்டுவரத் தடை விதிக்க மகாவலி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சு நேற்று சனிக்கிழமை தீர்மானித்தது.

இந்த வாயுவால் ஓசோன் படலத்தில் துவாரம் ஏற்படுவதுடன், சுற்றுச்சூழலும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. எனவே இதனைத் தடை செய்வதன் மூலம் இலங்கையின் சுற்றுச்சூழலை இன்னும் மேம்படுத்த முடியும் என்று கூறப்படுகின்றது. (அ)

# கரவை சிந்தாமணி முன்பள்ளி பரிசில் விழா

வடமராட்சி, டிசெ.10

கரவை சிந்தாமணி விநாயகர் முன்பள்ளி கலை நிகழ்ச்சியும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை மண்டபத்தில் நேற்றுச் சனிக்கிழமை மதியம் 2 மணியளவில் நடைபெற்றது .

இந்த நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸூம், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி கேதீஸ்வரனும் கலந்து கொண்டனர். வெற்றியீட்டிய சிறுவர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கி கௌரவித்தார். (அ-11)





# அப்ப எடுபிடி எண்டும் சொல்லலாமே?

"நான் எப்பவோ சொல்லிப் போட்டன் சுமந்திரன் இன்னும் அரசியலிலை அருவரி எண்டு. நீதான் அதைக் கேக்கிறாய் இல்லை விநாசி அண்ணை" – எண்டு சொல்லிக் கொண்டு வந்து சைக்கிளாலை பாஞ்சு இறங்கினான் முதலி. என்ன? ஏது? எண்டு கேக்க விடாமல் கத்தினான். "இப்ப பாத்தால் அரசியலிலை மட்டுமில்லை, தமிழிலையும் அருவரிதான் எண்டு தெரியுது. உவை எல்லாம் தமிழுக்கும், தமிழருக்கும் விமோசனம் தேடித்தாறதெண்டால்...? உவற்றை ரெலிபோன் நம்பர் இருந்தால் ஒரு ரெலிபோன் பண்ணி, "உவர் எந்தப் பள்ளிக்குடத்திலை தமிழ் படிச்சவரெண்டும், உவற்றை தமிழ் வாத்தியார் ஆர்" எண்டும் கேக்க வேணும்.

முதலி சொல்லுறதிலையும் ஞாயம் இருக்கிது.

எனக்கு விளங்கேல்லை சம்பந்தர் ஏன் உப்பிடியான ஆக்களை வைச்சுக் கொண்டு கும்மாளம் போடுறார் எண்டு. சுமந்திரன், தான் இங்கிலீசிலை படிச்சவரெண்டு நினைச்சால், தமிழ் கட்சிக்கு வர முன்னம், தனக்குத் தமிழ் தெரியுமோ? எண்டு தன்னைத் தானே ஒருக்காக் கேட்டிருக்க வேணும். பிறகு தெரியேல்லை எண்டால் ஆரேன் ஒரு தமிழ் வாத்தியாரிட்டைத் தமிழ் படிக்க வேணும். பப்ளிக்கிலை வந்து பேச முன்னம் பாத்ரூமைக்கை பூட்டிப் போட்டு நிண்டு ஒருக்காப் பேசிப்பாத்திருக்க வேணும். பிறகு பெண்டில், பிள்ளையள் எண்டு அவைக்கு முன்னாலை நிண்டு பேசிக் காட்ட வேணும். பிறகு அவை சரி எண்ட உடனை கொஞ்ச நாளா கட்சிக் காறருக்கு முன்னாலை நிண்டு பேசிக்காட்டிப் போட்டுத்தான் பப்ளிக்கிலை வந்திருக்கவேணும்.

தென்மாராட்சிக் கூட்டத்திலை நடந்ததும் உதுதானே? பொறுப்பு வாறதுக்கு என்ரை கட்சி எண்டு நினைக்கலாம். கட்சீக்கை வெறுப்பை வளக்கிறதுக்கு என்ரை கட்சி எண்டு நினைச்சது தானே பிரச்சினை. எத்தினை வருசமாக் கட்சிக்கை இருந்து , கட்சிக்குப் பாடுபட்டு உழைச்ச மனுசனை இந்த ஆள் இப்ப வந்து, "சத்தம் போடாமல் இருக்கிற தெண்டால் இரு இல்லாட்டிப் போ" எண்டு வகுப்பெடுக்கிறதெண்டால் அது கேக்கக் கஷ்டமாக் கிடக்கு. அவர் சொன்னதாலை இவருக்குக் கோபம் வந்திட்டு தெண்டால் அடக்கிக் கதைக்க வேணும். இது ஒரு பொது வேலை. எங்கடை வீட்டுக் காணிப் பிரச்சினை இல்லைக் கோபப்பட. "கோபத்தை வேந்தன் அடக்க வேணும்" எண்டுதான் சொல்லி இருக்கே ஒழிய உப்பிடி சன்னதம் கொள்ளச் சொல்லேல்லை.

"அப்பிடிச் சனம் சொல்லுறதைக் கேக்கக் கோபம் வருகிதெண்டு கண்டால் அவை பொது வேலைக்கு வரப்பிடாது" – எண்டு அப்பு சொன்னவ.

தாங்கள் தமிழுக்கும், தமிழுருக்கும் தொண்டு செய்ய எண்டு தாங்களாத்தானே உவை கட்சீக்கை வந்தவை. ஆரும் உவையளை வலுக்கட்டாயமா இழுக்கேல்லை எல்லே! வந்தவை தமிழையும், தமிழரையும் குத்தகைக்கு எடுத்தமாதிரி எண்ணப் படாது. எல்லாரையும் அணைச்சுக் கொண்டு போற மாதிரி நடக்க வேணுமேயொழிய மனம் நோக வைக்கப்பிடாது. பிறகு அவைபோய் நாலு பேப்பருக்குச் சொல்லி முறையிடுகிற மாதிரி நடக்கக்குடாது.

ஆர் எவரெண்டாலும் ஒரு மரியாதை வேணும். ஆரும் ஆரையும் கொச்சைப் படுத்தேலாது. ஆயுதம் எடுத்துப் போராடத் துவங்கினவன் தன்ரை தேவைக்கே வெளிக்கிட்டவன்? தன்ரை காணிப் பிரச்சினை எண்டே அவன் இயக்கத்துக்குப் போனவன். இயக்கத்திலை போய் சேர்ந்தவன் என்ன மனோ நிலையோடை அப்ப போய்ச் சேர்ந்திருப்பன் எண்டு நினைக்கிறியள்.

அவையளை "ஆயுததாரியள்"எண்டு சுமந்திரன் சொல்லுறது எந்தவகையிலை நியாயமெண்டு கேக்கிறன். ஒராக்கள் ஏன் ஆயுதம் வைச்சிருக்கின மெண்டும், அவையின்ரை நோக்கம் என்னெண்டும் பாத்துத்தான் அவைக்கு உப்பிடிச் சொல்லலாம். ஆயுதத்தைக் கையிலை கொண்டு திரிஞ்சு வேட்டை, கொள்ளை எண்டு செய்யிற ஆக்களைத்தான் ஆயுததாரியள் எண்டு எனக்குத் தெரியும். கொள்ளை, கொலைச் சம்பவங்களைப் பற்றிப் பேப்பரிலை போடேக்கை தான் அவையளை "ஆயுததாரியள் கைவரிசை" எண்டு போடுறவை. ஒரு இலட்சியத்துக்காகப் போர் செய்யிற ஆக்களை ஆயுததாரியள் போர் செய்தவை எண்டு சொல்லுறது பொருத்தமில்லை. போராளியளை ஆயுததாரியள் எண்டு ஒருக்காலும் சொல்லுறேல்லை.

அப்பிடி எண்டால் "தமிழ் தேசியக் கூட்டமைப்பின்ரை உறுப்பினர் சுமந்திரன்" எண்டதை "தமிழ் தேசியக் கூட்டமைப்பின்ரை எடுபிடி சுமந்திரன்" எண்டும் சொல்லலாம். தமிழிலை இப்பிடியும் வரும். அப்பிடியும் வரும்.

- வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காயங்களுடன் சடலம் மீட்பு

குருநாகல்,டிசெ.10

குருநாகல், தம்புள்ள பகுதியில் காயங்களுடன் சடலமொன்று தல கிரியாகம பிரதேசத்தின் பிரதான வீதியின் அருகிலிருந்து நேற்று சனிக் கிழமை மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்ட நபர் யார் என இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனவும், அவர் 25 மற்றும் 30 வயதுக்கு இடைப்பட்டவர் எனவும் அவரின் பையில் பேருந்து அனுமதிச் சீட்டு மற்றும் லொத்தர் டிக்கட் என்பன காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ)



## விஸா இல்லாதவர் கைது

கொழும்பு,டிசெ.10

'விஸா' அனுமதியின்றி நாட்டில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜையைக் கொழும்பு மோசடி தடுப்புப் பிரிவின் பொலிஸ் அதிகாரிகள், கொழும்பு - கெனல் வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கைது செய்தனர்.

செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட வெளிநாட்டுப் பிரஜை நேற்று சனிக்கிழமை கொழும்புக் கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். (அ)

## கட்டுநாயக்கவில் சூடு இருவர் படுகாயம்



கொழும்பு,டிசெ.10

கட்டுநாயக்க - ஹீனடிய பிரதேசத்தில் இரண்டு தரப்பினருக்கு இடையில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு ஏற்பட்ட மோதலில் படுகாயமடைந்த இருவர் நீர் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த மோதலில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.சம்பவத்தில் 25 மற்றும் 58 வயதான நபர்களே காயமடைந்ததாகவும், சம்பவம் தொடர்பாக இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# 13 இணையங்களை முடக்கியது அரசு




கொழும்பு,டிசெ.10

நல்லாட்சி அரசாங்கத்தில் ஊடக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட போதும், பல செய்தி இணையத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பு ஊடகமொன்று நேற்று சனிக்கிழமை தகவல் வெளியிட்டது.

கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை இலங்கை அரசாங்கத்தினால் 13 ஊடக இணையத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளன.

மகிந்த ஆட்சியை விடவும் சமகால அரசாங்கத்தில் ஊடக சுதந்திரம் அதிகரித்துள்ளதாக வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் ரணில் விக்ரமசிங்கவின் கூட்டு அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த 2015ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை 13 இணையத் தளங்கள் முடக்கப்பட்டுள்ளன.

இந்த 13 வலைத்தங்களில் ஜனாதிபதியின் புகழுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செய்தி வெளியிட்டமை தொடர்பில் 4 இணையத்தளங்களும், இரண்டு இணையத்தளங்கள் போலியான செய்தி வெளியிட்டமையாலும், மற்றொரு இணையத்தளம் யாழ். நீதவானுக்கெதிராகக் கருத்துக்களை வெளியிட்டமையாலும்,மேலும் 2 இணையத் தளங்கள் ஆபாசச் செய்தி வெளியிட்டமை ஆகிய காரணங்களாலுமே முடக்கப்பட்டன. (அ)

## அந்தநாள் ஞாபகம்



**10.12.1948**

மனித உரிமைகள் குறித்த அனைத்துலகப் பிரகடனத்தை ஐ.நா பொதுச் சபை அறிவித்தது. இந்நாள் உலக மனித உரிமைகள் நாளாக அறிவிக்கப்பட்டது.

## ஈழ அகதிச் சிறுமியை

# பாலியல் தொழிலாளியாக்க முயன்ற கும்பல் கைது!

சென்னை,டிசெ.10

வேலை பெற்றுத் தருவதாகக் கூறிக் தமிழகத்தின் கஷ்ரூரிலுள்ள இலங்கை அகதிச் சிறுமியொருவரை பாலியல் தொழிலில் ஈடுபடுத்த முயன்ற இந்தியர்கள் ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுமியின் தாயார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே குறித்த ஏழு பேரும் கைது செய்யப்பட்டனர்.

மூன்று தலைமுறைகளாகக் கஷ்ரூரில் அகதி வாழ்க்கை வாழ்ந்து வரும் குடும்பத்தைச் சேர்ந்த குறித்த சிறுமி வறுமையின் காரணமாகப் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாமல் வீட்டில் இருந்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த சிறுமியின் தாய்க்கு அறிமுகமான 27 வயதான பெண்ணொருவர் வீட்டிலிருக்கும் சிறுமிக்கு வேலை பெற்றுத் தருவதாக தெரிவித்து, திடீரென அவர் சிறுமியைத் திருப்பூருக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கு மேலும் சிலருடன் இணைந்து அவரைப் பலவந்தமாகப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்த அவர் முயன்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து அங்கிருந்து தப்பி வந்த சிறுமியின் செயற்பாட்டில் ஏற்பட்டிருந்த மாற்றம் தொடர்பில் சந்தேகமடைந்த சிறுமியின் தாயார் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து அனைத்து விடயங்களும் தெரியவந்துள்ள நிலையில் நான்கு பெண்கள் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்த ஏழு பேர் மீதும் ஆட்கடத்தல், சிறுவர் துஷ்பிரயோகம், சட்டவிரோதமாகத் தடுத்து வைத்தல் ஆகிய பிரிவுகளில் தமிழகப் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். (அ)

# 4 வயதுச் சிறுவனை பலியெடுத்த டெங்கு

கொழும்பு,டிசெ.10

கல்முனை - பாண்டிருப்பில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நான்கு வயது சிறுவன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

பாண்டிருப்பு, திருவள்ளுவர் வீதியைச் சேர்ந்த கபிஸ்கரன் என்ற சிறுவனே டெங்குவால் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். குறித்த குடும்பம் கடந்த சில காலமாக, பெரிய நீலாவணையில் வாடகைக்கு வசித்து வந்த நிலையிலேயே சிறுவன் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளார்.இதனைத் தொடர்ந்து சிறுவன் கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த நான்கு நாட்களுக்கு முன் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கபட்டிருந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.




இந்த நிலையில் குறித்த நான்கு வயது சிறுவனின் பரிதாப மரணம் அப்பகுதியில் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 3 விபத்துக்கள் உயிரிழப்பு 4

கொழும்பு,டிசெ.10

நேற்று சனிக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற 3 விபத்துக்களில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதாக நேற்று சனிக் கிழமை வெளியிட்ட அறிக்கையில் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் நீரில் மூழ்கி ஒருவரும், தலங்கம பிரதேசத்தில் ஜீப் வண்டி ஒன்று பாதையில் சென்ற இருவரை மோதிவிட்டுத் தப்பி சென்றதால் விபத்துக்குள்ளான இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னரும் உயிரிழந்துள்ளனர்.




அத்துடன் கடவத்தைப் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் சென்றவர் மீது மோதியமையினால் வீதியில் சென்றவர் உயிரிழந்துள்ளார். (அ)

# மனிதப் புதைகுழி வழக்கு மன்னாரில் ஒத்திவைப்பு

மன்னார்,டிசெ.10

மன்னார் - திருக்கேதீஸ்வரம், மாந்தைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு,மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் அடுத்த வருடம் ஜனவரி 29 ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டதாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2013ஆம் ஆண்டு மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியிலிருந்து மாந்தைப் பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்துக்கு அமைவாக வீதியோரமாகக் குழாய்கள் நிலத்தடியில் பதித்துச் சென்ற வேளையில் மனித எச்சங்கள் தென்பட்டன.

இதைத் தொடர்ந்து மன்னாரில் அன்றைய நீதிபதியாகவிருந்த கனகரட்ணம் ஆனந்தியின் முன்னிலையில்,சட்ட வைத்திய நிபுணர் டீ.எல். வைத்தியரத்தின தலைமையில், கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழியை 33 தினங்கள் அகழ்வு செய்த போது சுமார் 84 மனித எச்சங்களும், மண்டையோடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

பகுப்பாய்வுக்குட்படுத்தப்படும் நோக்கில் குறித்த மனித எச்சங்கள் அனுராதபுரம் வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இவற்றை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் மூலம் பகுப்பாய்வு செய்யவேண்டும் எனக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக நீதிமன்றில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் கடந்த தவணைகளின் போது நீதிமன்றிடம் கோரியிருந்தனர்.

இந்த நிலையிலேயே குறித்த வழக்கு நேற்றைய முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்

## 1,76,248...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தே அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். இது மொத்த நோயாளர்களின் எண்ணிக்கையில் 42.93 சதவீதம் எனக்கூறப்பட்டது.

ஜூன் மற்றும் ஒகஸ்ட் மாதங்களிலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் 8 ஆயிரத்து 340 நோயாளர்கள் இனங்காணப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## பசிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துரு ஹெல உறுமய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாயக் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி ஆகிய எட்டுக் கட்சிகளுமே, பசில் ராஜபக்ச தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளன.

தாமரை மொட்டு சின்னத்தைக் கொண்ட, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு அதிகளவு வேட்பு மனுக்களில் அதிகளவு இடங்களை ஒதுக்கி, ஏனைய கட்சிகளுக்கு அநீதி இழைப்பதாக இந்தக் கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

இதையடுத்து, தமது அணியின் மூத்த தலைவர்களான குமார வெல்கம மற்றும் சி.பி.ரட்நாயக்க ஆகியோரிடம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பை மகிந்த ராஜபக்ச ஒப்படைத்துள்ளார்.

இவர்கள், நேற்றுமுன்தினம் தொடக்கம் வேட்புமனுக்களில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதா என்று மாவட்ட ரீதியாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவி விலகுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வடமாகாண சபையின் பேரவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம், "உறுப்பினரின் பதவி விலகல் கடிதம் கிடைத்துள்ள போதிலும் புதிய உறுப்பினர் தொடர்பான தேர்தல் செயலகத்தின் அறிவித்தல் கிடைக்கவில்லை" எனத் தெரிவித்தார். (ச)

## ஊடகவியலாளர்களுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரால் அச்சுறுத்தப்பட்டனர்.

முல்லைத்தீவு தண்ணீர் முறிப்பில் அரச அதிபரின் மறுப்பையும் மீறி சிங்கள மீனவர்கள் இராணுவம், பொலிஸ் பாதுகாப்புடன் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து செய்தி சேகரிக்கச் சென்றவர்களே இராணுவத்தால் பிடிக்கப்பட்டு, சிவில் உடை தரித்த பொலிஸாரால் மிரட்டப்பட்டனர். அத்துடன் அவர்களின் கமராக்களும் பறிக்கப்பட்டு படங்கள், வீடியோக்களையும் அழித்துள்ளனர்.

மேலும், ஊடகவியலாளர்களை வீடியோ, படம் எடுத்த இராணுவத்தினர் அவர்கள் பயணித்த வாகன இலக்கத்தையும் பதிவு செய்துள்ளனர். (ச)

## கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்த்த மகாதேவன்பிள்ளை கஜானந்தன் (வயது 69) ன்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர், மரணச் சடங்கு ஒன்றுக்கு சென்றுவிட்டு கடலில் குளித்துள்ளார். அப்போது தடுமாறி வீழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தார் எனக் கூறப்படுகின்றது.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச - 11)

## 99 மேலதிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

56 வாக்குகளும் கிடைத்தன. இதையடுத்து 99 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன ஆதரவாக வாக்களித்தன.

கூட்டு எதிரணியினருடன் ஜே.வி.பியினர் எதிராக வாக்களித்தனர். வாக்களிப்பில் மகிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிவசக்தி ஆனந்தன் உட்பட 14 பேர் பங்கேற்கவில்லை. (ச)

## முடிந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை வெளியிட்டனர்.

அந்த அறிக்கையில், "தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா (இலங்கைத் தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்), ஆகியோர் இன்று (நேற்று) ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி பிரதிநிதிகளோடு எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் கலந்துரையாடியதன்படி, எதிர்வரும் தேர்தல் தொடர்பிலான அனைத்து பிரச்சினைகளுக்கும் சுமூகமான தீர்வு எட்டப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான விண்ணப்பங்கள் இலங்கை தமிழரசு கட்சியின் பெயரிலும் சின்னத்திலும் (வீடு) கையளிக்கப்படும். வடக்கு கிழக்கிலுள்ள வாக்காளர்களிடம் இலங்கை தமிழரசுக் கட்சியின் கீழ் அதன் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு பூரண ஆதரவு நல்குமாறு ஆர்வமுடன் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## 15,000...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அனைத்து கல்வி வலயங்களிலும் மேலதிக ஆசியர்களுக்கான அமைப்பொன்று வழங்கப்படும். இதேபோன்று கல்வி அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வெற்றிடங்களும் வருடந்தோறும் வர்த்தமானியில் அறிவிக்கப்படும். கல்வித்துறையில் எந்தவொரு நியமனமும் அரசியல் அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிருப்தியாகவே உள்ளதாக உள்வட்டாரங்களில் செய்திகள் உலவுகின்றன.

எனினும் நேற்றைய பேச்சின் முடிவில் எட்டப்பட்ட ஆசனப்பங்கீடு விவரம் வருமாறு:

**யாழ்ப்பாணம்**

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர், வல்வெட்டித்துறை நகரசபை என்பவற்றுடன், வேலணை பிரதேச சபையின் பிரதி தவிசாளர் பதவியுடன் 40 வீத வேட்பாளர்களும், யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் பதவியும் ரெலொவிற்கு வழங்கப்படும்.

நல்லூர், வலி கிழக்கு, கரவெட்டி, தெற்கு மேற்கு பிரதேச சபைகளை தமிழரசுக் கட்சியும் ரெலோவும் தலா இரண்டு வருடங்கள் பங்கிடுவார்கள். நல்லூர், கரவெட்டி தெற்கு மேற்கு முதல் இரு வருடம் தமிழரசுக் கட்சிக்கு. இந்த மூன்று சபைகளில் ரெலோ, தமிழரசுக்கட்சி தலா 40 வீதம், 20 வீதம் புளொட்டிற்கு வழங்கப்படும்.

புளொட் உடுவில், வட்டுக்கோட்டை தொகுதிகளை கோரியது. எனினும் மானிப்பாய் தொகுதி மட்டுமே வழங்கப்படும் எனக் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சியின் மூன்று சபைகளான கரைச்சி பூநகரி, பச்சிலைப் பள்ளி மூன்று சபைகளின் தவிசாளர்களும் தமிழரசுக்கட்சி. புளொட், ரெலோவிற்கு மூன்றின் உப தவிசாளர்களும். இங்கு தமிழரசுக் கட்சிக்கு 60 வீதம் மற்றைய இரண்டு பங்காளிகளிற்கும் தலா 20 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு**

புதுக்குடியிருப்பு தமிழரசுக் கட்சி. கரைத்துறைப்பற்று பிரதேச சபையை ரெலோ, புளொட் பங்கிடும். உப தவிசாளர் தமிழரசுக்கட்சிக்கு. மாந்தை கிழக்கு ரெலோ, துணுக்காய் தமிழரசுக் கட்சிக்கு.

**வவுனியா**

நெடுங்கேணி பிரதேச சபை தமிழரசுக் கட்சிக்கு. வவுனியா நகரச பை மேயர் தமிழரசுக் கட்சி. பிரதி மேயர் புளொட். வவுனியா தெற்கு பிரதேச சபை, செட்டிக்குளம் பிரதேச சபையையும் ரெலோ, புளொட் தலா இரண்டு வருடங்கள் பங்கிடும்.

**மன்னார்**

மன்னாரில் மன்னார் நகரசபை, மாந்தை மேற்கு ரெலோவிற்கு. மன்னார் பிரதேசசபை, நானாட்டான் பிரதேச சபை தமிழரசுக் கட்சிக்கு.

**மட்டக்களப்பு**

களுவாஞ்சிக்குடி, போரதீவு பிரதேச சபைகள் ரெலோவிற்கு. மட்டு நகரசபை பிரதிமேயரும் ரெலோவிற்கு. செங்கலடி புளொட்டிற்கும் தமிழரசுக் கட்சிக்கும் பங்கிடப்படும். ஆரையம்பதி புளொட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுணதீவு பிரதேச சபையின் உப தவிசாளர் புளொட்டிற்கும் வழங்கப்படவுள்ளது.

**அம்பாறை**

திருக்கோவில், காரைதீவு பிரதேச சபைகள் ரெலோவிற்கு. கல்முனை எதிர்கட்சி தலைவர் பதவியும் ரெலோவிற்கு கிடைக்கும். இங்கு 8 உறுப்பினர்களில் 5 ரெலோவிற்கும், 3 தமிழரசுக் கட்சிக்கும். நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு பிரதேசசபைகள் தமிழரசுக் கட்சிக்கு வழங்கப்படும்.

**திருகோணமலை**

மூன்று சபைகளிலும் தமிழரசுக் கட்சியே தவிசாளர் பதவியையும், உப தவிசாளர் பதவிகளையும் பெறும். ஏனைய கட்சிகளுடன் பேசி, உறுப்பினர்களை நியமிக்கப்படுவர். (ச)


வேலை வாய்ப்பு

யாழ். நகரில் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு வேலையாட்கள் தேவை.

1) கணினி அறிவுடையோர்
2) கணினி பில் சிஸ்ரம் தெரிந்தவர்
3) கணக்காளர்
4) உதவியாளர் - ஆங்கிலம் தெரிந்தவர்

இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

தொ.பே.: 077 3611 282



40 ஆவது ஆண்டு நினைவு தினம்

11.12.2017



அமரர் ஹன்டி பேரின்பநாயகம்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் முதலாவது தலைவரும், நல்லாசிரியரும், நேர்மையான காந்தியவாதியும், முற்போக்குச் சிந்தனையாளரும், ஆளுமை நிறைந்த அதிபரும், சீர்திருத்தவாதியும், இன ஐக்கிய கொள்கையும் இன சமத்துவக் கோட்பாடும் கொண்ட தேசியவாதியாகவும் விளங்கிய ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் 40 ஆவது ஆண்டு நினைவு தினமான இன்றைய நாளில் அன்னாரை நினைவு கூர்ந்து எமது அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம்
காந்தி நிலையம்
D 8, உருத்திரபுரம், கிளிநொச்சி



உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்

மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது



கண்ணீர் அஞ்சலி



தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு பரமசிவக்குருக்கள் சிவஸ்ரீ சிவசங்கரக் குருக்களின் துனைவியார்

சிவசங்கரக்குருக்கள் உமாதேவி

அவர்கள் நேற்று (09.12.2017) சனிக்கிழமை இறைபதமடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வேத விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

வேத விநாயகர் விளையாட்டுக்கழகம், தாவடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டுப்படை தாக்குதல் 23 பேர் பலி

சனா,டிசெ.10

யேமன் நாட்டின் சனா பகுதியில் சவுதிக் கூட்டுப்படைகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடத்திய விமானத் தாக்குதலில் 23 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

யேமன் நாட்டின் அரசுக்கெதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுத்திப் புரட்சிப் படையினர் கடந்த இரண்டாண்டுகளாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் சனா உட்பட பல பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டுள்ளதுடன், அந்தப் பகுதிகளைச் சுற்றிச் சோதனைச் சாவடிகள் அமைத்துள்ளனர்.

இந்த நிலையில், யேமனின் வடமேற்குப் பகுதியிலமைந்துள்ள சனா நகரில் ஹவுத்திப் புரட்சிப் படையினரைக் குறிவைத்து சவுதிக் கூட்டுப்படைகள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 23 அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். (எ)

# அகதிகளை ஏற்கும் சுவிஸ்



பேர்ன், டிசெ. 10

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஆணையத்தின் வேண்டுகோளுக்கு இணங்க லிபியாவில் இருக்கும் 80 அகதிகள் வரை சுவிஸில் அனுமதிப்பதென நேற்று சனிக்கிழமை முடிவெடுக்கப்பட்டுள்ளது.

லிபியாவில் நிலவும் அசாதாரண சூழலையைக் கணக்கில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் இதைச் செய்வதாக சுவிஸ் நீதித்துறை அமைச்சர் சிமோனிடா சோமருகா தெரிவித்தார்.

5000 அகதிகள் லிபியாவின் தடுப்பு மையங்களில் தங்கியிருக்கும் நிலையில் அவசரமாக வெளியேற்றப்படவுள்ளார்கள். ஐரோப்பாவுக்குள் நுழைய முயலும் இவர்கள் லிபியாவின் முகாம்கள் மற்றும் அதிகாரபூர்வமற்ற தடுப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். இதில் அதிகமாகப் பாதிப்படைந்த 80 வரையான அகதிகளை தங்கள் நாட்டில் அனுமதிக்க சுவிஸ் ஒத்துக்கொண்டுள்ளது.

முக்கியமாக லிபியத் தடுப்பு மையங்களில் தங்கியிருக்கும் பெண்கள், சிறார்கள் சித்திரவதை, பாலியல் வன்முறை, மனிதக் கடத்தல் மற்றும் அடிமைத்தனம் போன்ற பிரச்சினைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கே இவ்வாறான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (எ)

# ஐ.நா. படைகள் மீது குறிவைத்துத் தாக்குதல்

## 14 பேர் சாவு



கோமா,டிசெ.10

கொங்கோவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஐ.நா. அமைதிப் படை முகாம் மீது போராட்டக்காரர்கள் நடத்திய தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர்.

கொங்கோ நாட்டில் 1996ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை நடந்த உள்நாட்டுச் சண்டைகளில்பல இலட்சம்மக்கள்பலியானதையடுத்து அங்கு ஐ.நா. அமைதிப்படை அனுப்பப்பட்டது. தற்போது ஐ.நா. அமைதிப்படையின் 18 ஆயிரம் வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இப்போதும் பல ஆயுதக்குழுக்கள் செயல்படுகின்றன. இவர்கள், ஐ.நா. அமைதிப்படையினரைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்துகின்றனர்.

இந்த நிலையில், அந்த நாட்டின் வட கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பெனி நகரில் உள்ள ஐ.நா. அமைதிப் படையினரின் முகாம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர். ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த போராட்டக்காரர்கள் அங்கு இருந்த அமைதிப்படையினரை நோக்கிச் சரமாரியாகச் சுட்டதில் அமைதிப்படையைச் சேர்ந்த 14 வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் சுமார் 53 பேர் படுகாயமடைந்தனர். இன்னும் சிலரைக் காணவில்லை. அவர்களை போராட்டக்காரர்கள் கடத்திச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்தக் கொலைவெறித் தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச்செயலாளர் அண்டானியோ குட்டெரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (எ)

# வடகொரிய மிரட்டலைச் சமாளிக்க ஜப்பான் திட்டம்!

டோக்கியோ,டிசெ.10

வட கொரியாவின் மிரட்டலைச் சமாளிக்க ஜப்பான் நீண்ட தூரம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் கொண்ட ஏவுகணைகளை அமெரிக்க நிறுவனத்திடமிருந்து வாங்கத் திட்டமிட்டுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட நாடுகளுக்கு வட கொரியா சிம்ம சொப்பனமாகவுள்ளது. இந்த நாடுகளை மிரட்டும் வகையில் தொடர்ந்து அணு குண்டுச் சோதனைகளையும், ஏவுகணைச்சோதனைகளையும்நடத்துகிறது. இதனால் கொரிய தீபகற்பத்தில் போர்ப் பதட்டம் நிலவுகிறது. சமீப காலமாகப் பசுபிக் கடலிலுள்ள அமெரிக்கப் பிராந்தியத்தைத் தாக்கும் வகையில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நீண்ட தூர ஏவுகணைகளை வீசி வடகொரியா ஏவுகணைச் சோதனை நடத்தி வருகிறது.

இந்த ஏவுகணைகள் ஜப்பான் நிலப்பரப்பின் மீது பறந்து சென்று குறிப்பிட்ட இலக்கை அடைகிறது. வடகொரியாவின் இத்தகைய நடவடிக்கை ஜப்பானுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதனாலேயே தனது பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு குறித்த முடிவை எடுத்துள்ளது.(எ)





# தளபதியை மறுத்த ஓவியா?

சென்னை,டிசெ.10

தளபதியின் அடுத்த படத்தில் அவருடன் நடிக்க நடிகை ஓவியா மறுப்புத் தெரிவித்துள்ளார்.

விஜய் தற்போது முருகதாஸ் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். இந்தப் படத்தில் ஒரு முக்கியமான பாத்திரத்தில் ஓவியாவை நடிக்க வைக்க அணுகியுள்ளனர். ஆனால், என்ன காரணம் என்று தெரியவில்லை, அந்தப் படத்தில் ஓவியா நடிக்க மறுத்து விட்டார் எனக் கிசுகிசுக்கப்படுகின்றது.

இந்தச் செய்தி எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை, ஆனாலும், தற்போது சமூக வலைத்தளங்களில் இந்தச் செய்தி பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.(எ)

# நிலநடுக்கம்!



வெலிங்டன்,டிசெ.10

பசுபிக் கடலில் பிஜிதீவுகள் அருகே உள்ள டோங்கா தீவில் நேற்று சனிக்கிழமை கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 5.7 ரிக்டர் அளவு எனப் பதிவானது.

பசுபிக் கடலில் நியூசிலாந்தருகே பிஜி தீவுகள் உள்ளன. பிஜிதீவுகளின் கிழக்குத் திசையில் அமைந்துள்ள டோங்காவிலேயே நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் மற்றும் கட்டிடங்கள் குலுங்கின. இதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். அங்கு 5.7 ரிக்டரில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக அமெரிக்கப் புவிசார் ஆய்வு மையம் தெரிவித்தது. (எ)

# “பாகிஸ்தானுக்கு போகவேண்டாம்”

நியூயோர்க்.டிசெ.10

பாகிஸ்தானுக்கு அவசியமின்றிப் பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு தங்கள் நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு அமெரிக்கா நேற்று சனிக்கிழமை எச்சரிக்கை விடுத்தது.

பாகிஸ்தானுக்கு அத்தியாவசியமற்ற பயணங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்று தங்கள் நாட்டு மக்களை அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது. பாகிஸ்தானில் பயங்கரவாத வன்முறைகள் மற்றும் பிரிவினைவாதத் தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில் அமெரிக்கா இந்த அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது. முன்னர் கடந்த மே 22 ஆம் திகதியும் இதே போன்று அமெரிக்கா தங்கள் நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்தது.

7 மாதங்களுக்குப் பிறகு தற்போது, பாகிஸ்தானுக்கு அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும் என்ற அறிவுறுத்தலை அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ளது. பாகிஸ்தானில் அரசு ஊழியர்கள், மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபடும் என்.ஜீ.ஓக்களின் ஊழியர்கள், மூத்த பழங்குடியினர்கள், சட்ட அமுலாக்கத் துறை அதிகாரிகள் ஆகியோரை குறிவைத்து பாகிஸ்தானில் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# சிவகார்த்தியின் தொடர் சாதனை



சென்னை,டிசெ.10

சிவகார்த்திகேயன் நடிப்பில் இன்னும் சில வாரங்களில் ‘வேலைக்காரன்’ படம் திரைக்கு வரவுள்ளது. இந்தப் படம் சமீபத்தில் சென்ஸார் சென்று யு சான்றிதழ் பெற்றுள்ளது.

இதன் மூலம் தான் நடித்த ‘மெரீனா’ முதல் ‘வேலைக்காரன்’ வரை தொடர்ந்து 10 படங்களுக்கும் யு சான்றிதழ் பெற்று சிவகார்த்திகேயன் சாதனை படைத்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக் பாஷில் பீற்றர்சன




லண்டன், டிசெ.10

ஆஸ்திரேலியாவில் நடைபெற இருக்கும் 'பிக் பாஷ்' ரி-20 தொடருடன் சர்வதேசக் கிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெறவுள்ளதாக கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னணி வீரராகத் திகழ்ந்த கெவின் பீற்றர்சன், அதிரடியான ஆட்டத்தால் தனக்கான தனியிடத்தைப் பிடித்தவர். ஆயினும் வெளிப்படையான கருத்துக்களை வெளியிட்டு, பல சர்ச்சைகளில் சிக்கினார். குறிப்பாக இங்கிலாந்து கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட மோதலால் கடந்த 2013ஆம் ஆண்டு ஆஷஸ் தொடருக்குப்பின் அவர் , இங்கிலாந்து அணியில் சேர்க்கப்படவில்லை.

ஆயினும் உள்ளூர் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடர்களில் அவர் விளையாடி வருகிறார். அத்துடன் சர்வதேசப் போட்டிகளுக்கு வர்ணனையாளராகவும் தொழிற்படுகின்றார்.

இந்த நிலையில் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ள பிக் பாஷ் தொடருடன் சர்வதேசக் கிரிக்கெட்போட்டிகளில் இருந்து பீற்றர்சன் விடைபெறவுள்ளார் என அறிவித்துள்ளார். (அ)




# என்ன செய்யும் இலங்கை?

தர்மசாலா, டிசெ.10

இந்திய, இலங்கை அணிகளுக்கிடையிலான, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் இன்று ஆரம்பிக்கவுள்ளது.

தர்மசாலாவில் இடம்பெறவுள்ள இந்தப் போட்டி, காலை 11.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

டெஸ்ட் போட்டிகளில், இரண்டாவது போட்டியைத் தவிர, ஏனைய இரு போட்டிகளிலும் இலங்கை அணி ஓரளவுக்குப் போராடியிருந்த நிலையில், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் எவ்வாறு விளையாடுமென்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

குறிப்பாக, வழக்கமான தலைவரான உபுல் தரங்கவுக்குப் பதிலாக, புதிய தலைவராக திஸர பெரேரா நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அவரது தலைமைத்துவமும் தனிப்பட்ட பெறுபேறுகளும் எவ்வாறிருக்கும் என்பது, கூர்ந்து கவனிக்கப்படும் ஒன்றாக இருக்கும். அதேபோல், தலைமைத்துவத்திலிருந்து நீக்கப்பட்ட தரங்க, விளையாடும் பதினொருவரில் சேர்க்கப்படுவாரா என்ற கேள்வியும் உள்ளது.

அத்தோடு, குசல் பெரேராவின் மீள்வருகை, இலங்கைக்குப் பலத்தை வழங்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், வழக்கமான அணித் தலைவர் விராட் கோஹ்லிக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# நியூசிலாந்து சுமாரான ஆட்டம்!

நியூஸிலாந்து, டிசெ.10

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் சுமாரான ஆரம்பம் கண்டது நியூசிலாந்து அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. நியூசிலாந்தின் ஆரம்ப வீரர்களாக ராவல்பின்னர்லாதம் 22 ஓட்டங்களுடன்ஆட்டமிழந்தார் லாதம் ஆகியோர் களமிறங்கினர். ராவல், வில்லியம்சன் இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அரைச்சதம் கடந்தார் ராவல். இணைப்பாட்டமாக 89 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வில்லியம்சன். ரெய்லர், நிக்கொல்ஸ் இருவரும் முறையே 16, 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். 84 ஓட்டங்களுடன் ராவலை வீழ்த்தினார்கபிரியேல்.

வழக்கம்போல் அடித்தாடினார் கிரான்டகோம். மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் பாணியில் விளையாடிய அவர் 50 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். 58 ஓட்டங்களுடன் கபிரியேலிடம் வீழ்ந்தார் கிரான்ட்கோம். நாள் முடிவில் 7 இலக்குகளை இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றுள்ளது நியூஸிலாந்து. பன்ரெல் 12 ஓட்டங் களுடனும், வாக்நெர் ஒரு ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர்.



# நானே ராஜா!

போர்த்துக்கல், டிசெ.10

உதைபந்தாட்ட உலகில் என்னை விடச் சிறந்த வீரர் என்று எவருமில்லை என்று மார்தட்டியுள்ளார் போர்த்துக்கல் அணித் தலைவர் ரொனால்டோ.

உதைபந்தாட்ட உலகின் உயரிய விருதுகளில் ஒன்றாகக் கருதப்படும் தங்கப்பந்து விருதை ஐந்தாவது தடவையாக நேற்றுமுன்தினம் தனதாக்கியிருந்தார் ரொனால்டோ. இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'வேறு எந்த வீரரும் என்னைப் போன்ற தனிப்பட்ட விருதுகளை அதிக அளவில் பெற்றது கிடையாது. நான் இந்தத் தங்கப் பந்து விருதை மட்டும் பற்றிப் பேசவில்லை. எல்லோருடைய முக்கியத்துவத்துக்கும் நான் மதிப்பு அளிக்கிறேன். ஆனால், என்னை விடச் சிறந்த வீரராக யாரையும் நான் பார்க்கவில்லை' என ரொனால்டோ மேலும் தெரிவித்தார்.

ரொனால்டோவின் இந்தக் கருத்துக்கு அவரது தன்னம்பிக்கையை வெளிப்படுத்துவதாக இருப்பதாக ஒருதரப்பினர் ஆதரவளித்துள்ளனர். ஆனால் தன்னை மட்டுமே உயர்த்தி ஏனைய வீரர்களை அவர் இழிவுபடுத்தியுள்ளதாகப் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர். குறிப்பாக ரொனால்டோவுக்கு நேரடிப் போட்டியாளாரான மெஸ்ஸியைக் குறிவைத்தே அவர் இவ்விதம் கூறியிருப்பதாகவும் நம்பப்படுகின்றது. (அ)

## கலைமதி அசத்தல்



சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில், நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கலைமதி விளையாட்டுக் கழகம் அபார வெற்றிபெற்று லீக் சுற்றுக்குள் நுழைந்தது.

நேற்று மாலை நடைபெற்ற இந்திய ஆட்டத்தில கலைமதி (ஏ) விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலட்டி விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்தப் போட்டியில் ஆரம்பம் முதல் சிறப்பாக விளையாடிய கலைமதி, 10:1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று லீக் சுற்றுக்குள் நுழைந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 10.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.